# <u>விழுப்புரம் நகராட்சி</u>

**2022–ஆம் ஆண்டு மார்ச்** மாதம் **31–ஆம் தேதி வியாழக்கிழமை நண்பகல்** 12.30 மணிக்கு நடைபெற்ற **நகர்மன்ற "அவசர கூட்ட"** நடவடிக்கைகள்.

**<u>முன்னிலை :–</u> திருமதி.பி.தமிழ்ச்செல்வி, எம்.பி.ஏ.,**
**நகர்மன்ற தலைவர்,**
**விழுப்புரம் நகராட்சி**

## <u>நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட சிறப்பு தீர்மானம்</u>

- தமிழக மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் தமிழ்நாட்டின் முதல்வராக பொறுப்பேற்றவுடன் கொரோன காலங்களில் சிறப்பாக அரசை வழிநடத்தி அனைத்து தரப்பு மக்களுக்கும் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றியும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து அத்திட்டங்களை தங்குதடையின்றி மக்களை சென்றடையும் வகையில் உள்ளாட்சி அமைப்பு தேர்தலை **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் தலைமையில் அனைத்து மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேருராட்சிகளை கைப்பற்றி அமோக வெற்றி பெற்றதற்கு **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களுக்கு இந்நகர்மன்றம் சார்பாக நன்றிகலந்த வணக்கத்தையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறது. மேலும், விழுப்புரம் மாவட்டத்தில் அனைத்து பேருராட்சி / நகராட்சிகளும் அமோக வெற்றி பெற்றதற்கு அயராது பாடுபட்ட **மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர்** அவர்களுக்கும் இந்நகர்மன்றம் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் உள்ளாட்சியிலும், நல்லாட்சி வேண்டுகோளை ஏற்று விழுப்புரம் நகராட்சி நகர் மன்ற உறுப்பினர்களை தேர்வு செய்த வாக்காளர்களுக்கு இந்நகர்மன்றம் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

# மன்றப்பொருள்

**1.** இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள பூந்தோட்டம் ஆரம்பம் மற்றும் உயர்நிலைப் பள்ளியில் மாவட்ட ஆட்சியர், நகராட்சி ஆணையர் மற்றும் பொறியருடன் ஆய்வு செய்யப்பட்டது. தலைமை ஆசிரியர் கோரிக்கையின்படியும் மேற்படி பள்ளியில் சுமார் 1200 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர் எனவும், மேற்படி பள்ளி வளாகத்தில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கிவிடுவதால் மாணவ, மாணவிகள் மிகவும் சிரமத்திற்குள்ளாகிறார்கள் எனவும், உடனடியாக மேற்படி பள்ளியில் பேவர் பிளாக் அமைத்து தருமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பூந்தோட்டம் பள்ளியில் பேவர் பிளாக் அமைத்திட ரூ.7.20 இலட்சம் மதிப்பீட்டில் உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், பணியின் செலவினத்தை நகராட்சியின் கல்வி நிதியிலிருந்து மேற்க்கொண்டிட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம். (245/2022/இ4)

**2.** இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள பூந்தோட்டம் உயர்நிலைப் பள்ளியில் மாவட்ட ஆட்சியர், நகராட்சி ஆணையர் மற்றும் பொறியருடன் ஆய்வு செய்யப்பட்டது. தலைமை ஆசிரியர் கோரிக்கையின்படியும் மேற்படி பள்ளியில் சுமார் 750 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். மேற்படி மாணவ, மாணவிகள் வகுப்பறையில் போதுமான ஸ்டீல் பெஞ்ச் அமைத்து தருமாறு மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளதை அடுத்து, 72 எண்ணிக்கையிலான ஸ்டீல் பெஞ்ச் மற்றும் டெஸ்க் அமைத்திட ரூ.9.70 இலட்சம் மதிப்பீட்டில் உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், பணியின் செலவினத்தை நகராட்சியின் கல்வி நிதியிலிருந்து மேற்க்கொண்டிட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம். (245/2022/இ4)

**3.** விழுப்புரம் நகராட்சியில் வருகின்ற கோடை காலத்தை முன்னிட்டு நகர எல்லைக்குட்பட்ட 1 முதல் 42 வார்டுகளில் உள்ள மினி குடிநீர் தேக்கத்தொட்டிகளில் பழுதடைந்துள்ள 1HP மின்மோட்டார்கள், சின்டெக்ஸ் டேங்க் மற்றும் பேனல் போர்டு ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து விழுப்புரம் நகர மக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் வழங்க **நகர்மன்ற தலைவர்** அவர்கள் உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து மேற்காணும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.80 இலட்சம் குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம். (1509/2022/இ2)

**4.** விழுப்புரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்குகள் பராமரிப்பு பணி செய்ய தேவையான உதிரி பாகங்கள் அலுவலக இருப்பில் குறைவாக இருப்பதால், சரி செய்ய இயலாமல் உள்ளது. தற்போது தெருவிளக்குகள் பராமரிப்பு செய்ய 1 முதல் 21 வரையிலான வார்டுகளுக்கு தெருவிளக்குகள் பராமரிக்க தேவையான உதிரி பாகங்கள் வாங்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4,97,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(1056/2022/இ2)

**5.** விழுப்புரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்குகள் பராமரிப்பு பணி செய்ய தேவையான உதிரி பாகங்கள் அலுவலக இருப்பில் குறைவாக இருப்பதால், சரி செய்ய இயலாமல் உள்ளது. தற்போது தெருவிளக்குகள் பராமரிப்பு செய்ய 22 முதல் 42 வரையிலான வார்டுகளுக்கு தெருவிளக்குகள் பராமரிக்க தேவையான உதிரி பாகங்கள் வாங்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4,97,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(1056–1/2022/இ2)

**6.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடித ந.க.எண்.27000/2021/WB, நாள்.02.03.2022 தேதிய கடிதத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கையில் அறிவிப்பு எண்.12–ல் **மாண்புமிகு அமைச்சர்** அறிவிப்பில் தெரிவித்துள்ளப்படி நகராட்சிகளில் பராமரிக்கப்படும் தெருவிளக்குகள் LED போன்ற ஆற்றல்மிகு தெருவிளக்குகளாக மாற்றவும் மற்றும் புதியதாக தெருவிளக்குகள் அமைக்கவும் அறிவிக்கப்பட்டுள்ளது. விழுப்புரம் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் தெருவிளக்குகள் அனைத்தையும் IGA – Street Light Energy Audit Report–ல் குறிப்பிட்டுள்ள குழல் விளக்குகள், சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் மெர்குரி ஆவி விளக்குகள், இது போன்ற விளக்குகளால் மின்சார செலவினம் அதிகமாகிறது என IGA நிறுவனம் ஆய்வு செய்த அறிக்கையில் 6364 எண்ணிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது விழுப்புரம் நகராட்சியில் 5500 எண்ணிக்கையிலான தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு விரிவான திட்ட அறிக்கை அனுப்பி வைத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம். (949/2022/இ2)

**7.** இந்நகராட்சிக்கு சொந்தமான மாம்பழப்பட்டு ரோட்டில் உள்ள ஆடு அடிக்கும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 01.04.2021 முதல் 31.03.2024 முடிய திரு.எஸ்.நசுருதின் என்பவருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது. 01.04.2021 முதல் 31.03.2022 வரை ஓராண்டிற்கு ரூ.1,65,000/-+ரூ.1,650 ஆக மொத்தம் ரூ.1,66,650/- செலுத்தப்படவேண்டும். இந்நிலையில் குத்தகைதாரர் 2018 முதல் 2021 வரை மேற்கண்ட குத்தகை இடத்தினை எடுத்தி நடத்தி வந்துள்ளார் அதற்காக அவர் செலுத்திய குத்தகை வைப்புத் தொகை ரூ.75,000/-ஐ திரும்பப் பெறாமல் அதனை 01.04.2021 முதல் 31.03.2022 வரை செலுத்த வேண்டிய தொகைக்கு ஈடுசெய்ய தெரிவித்து மீதமுள்ள தொகையினை செலுத்தியுள்ளார். தற்பொழுது 2021-2022ம் ஆண்டுக்கான குத்தகை தொகை ஈடு செய்யப்படவேண்டியுள்ளதால் 2018 முதல் 2021 வரை அவர் செலுத்திய குத்தகை வைப்புத் தொகை கீழ்க்கண்ட விவரப்படி குத்தகை வைப்பு தொகை காலம் கடந்த குத்தகை வைப்பு தொகை பதிவேட்டில் உள்ளது.

| வ.எண் | . பெயர் | இடம் | வைப்பு தொகை பதிவேடு ஆண்டு | வைப்பு தொகை செலுத்தி ஆண்டு | வைப்பு தொகை பதிவேடு பக்கம் எண்/ வ.எண் | தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | திரு.எஸ்.நசுருதின் | மாம்பழப்பட்டு ரோட்டில் உள்ள ஆடு அடிக்கும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் | 2021-2022 | 2017-2018 | 10 / 58 | 75000 |
| | | | | | | 75000 |

மேற்காணும் காலம் கடந்த குத்தகை வைப்பு தொகையினை குத்தகைதாரர்கள் 2021-2022 மாம்பழப்பட்டு ரோட்டில் உள்ள ஆடு அடிக்கும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு செலுத்த வேண்டிய தொகையில் ஈடுசெய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:-**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(10221/2019/அ1)

**8.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.11, திரு.வி.க வீதியில் உள்ள அருள்மிகு ஆஞ்சநேயர் சுவாமி திருக்கோவில் லட்ச தீப திருவிழா ஆண்டு தோறும் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் துவங்கி மே மாதம் முடிற நடைபெறுவதை முன்னிட்டு திரு.வி.க.வீதி. அய்யனார் குளம் தெற்கு தெரு மற்றும் அய்யனார் குளம் வடக்கு தெரு பகுதிகளில் அமைக்கப்படும் தற்காலிக தகர கொட்டைகள் கடை அமைத்து உரிய கட்டணம் நிபந்தனைக்குட்பட்டு வசூல் செய்யும் உரிமத்திற்கு குறுகிய கால பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், தினசரி நாளிதழில் விளம்பரம் செய்திடவும் மற்றும் இதர செலவினங்களுக்கு ரூ.50,000/- வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கோவிட் 19 கொரோனா தொற்று பரவாமல் இருக்க திருவிழாவிற்கு அரசு அல்லது மாவட்ட நிர்வானம் அனுமதி அளிக்க மறுக்கும் பட்சத்தில் குத்தகைதாரர் செலுத்திய குத்தகை தொகை திரும்ப அளிக்கப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு மற்றும் கோவிட்-19 பரவாமல் தடுக்க நகராட்சி நிர்வாகம் வழங்கப்படும் அறிவுரையின்படி செயல்பட வேண்டும் என்ற நிபந்தனையினை சேர்த்து ஏல நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
3. மேற்கண்ட பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்திடவும் மற்றும் இதர செலவினங்களுக்கு ரூ.50,000/- நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(946/2022/அ1)

**9.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட திரு.வி.க வீதியில் அமைந்துள்ளஅருள்மிகு ஆஞ்சநேயர் சுவாமி திருக்கோவில் லட்சதீப மகோற்சவப்பெருவிழாவினை முன்னிட்டு திரு.வி.க. சாலை, கோர்ட் ரோடு சந்திப்பிலிருந்து ஜவஹர்லால் நேருஜி ரோடு சந்திப்பு வரை போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் இடையூறு இன்றி ஒப்படைக்கும் நாள் முதல் 30 தினங்களுக்கு சாலை ஓரம் தற்காலிக தீப்பற்றாத தகர கொட்டகை கொண்ட கடைகள் அமைத்து கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 22.03.2022-இல் நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில், பொது ஏலத்தில் எவரும் கலந்து கொள்ள முன்வராத நிலையில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் (ம) முகவரி திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1. | எம்.விக்ரமன், எண்.8, வடக்கு தெரு, விழுப்புரம் - 605 602. செல்.94865 05627 | 2,30,000 |
| 2. | டி.மோகன், எண்.142, திரு.வி.க.வீதி, விழுப்புரம் - 605 602. செல்.94436 23643. | 2,42,000 |

<u>அலுவலக குறிப்பு:-</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் டி.மோகன், எண்.142, திரு.வி.க.வீதி, விழுப்புரம் - 605 602 என்பவர் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.2,42,000/- கோரியுள்ளார். மேற்படி உரிமத்தினை அன்னாருக்கு வழங்க மன்ற அனுமதிக்கலாம்.

(946/2022/அ1)

**10.** விழுப்புரம் நகராட்சியின் சென்னை உயர்நீதி மன்றம் வழக்கு எண்.WP.No.17380/2017 மற்றும் 6849/2021 Safai Karamcharis Andolan என்பவரால் இந்நகாட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் நகராட்சியின் சார்பாக திரு.ஜெயபிரகாஷ் நாராயணன் வழக்கறிஞர் சென்னை உயர்நீதி மன்றம் அவர்கள் வழக்கினை எடுத்து நடத்தி வரப்பட்ட நிலையில் 09.03.2022 தேதிய வழக்கில் மேல்நடவடிக்கையின் எதிர்வாதுரை தாக்கல் செய்வது தொடர்பாக சென்னை உயர்நீதி மன்ற அரசு வழக்கறிஞரின் 11.03.2022 தேதிய கடிதத்தில் மாநில அரசு வழக்கறிஞர் அவர்களால் வழக்கினை எடுத்து நடத்த வேண்டியதன் பொருட்டு திரு.P.முத்துகுமார் மாநில அரசு வழக்கறிஞர் சென்னை உயர்நீதி மன்றம் அவர்கள் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்திடவும், எதிர்வாதுரை தாக்கல் செய்து ஒப்படைக்கவும் வழக்கின் கட்டணமாக கோரப்பட்ட தொகை ரூ.25,000/- வழக்கின் அவசர அவசியம் கருதி திரு.P.முத்துகுமார் மாநில அரசு வழக்கறிஞர் சென்னை உயர்நீதி மன்றம் அவர்களுக்கு வழங்குவதற்கான மன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். (4918/2021/இ3)

**11.** இந்நகராட்சிக்கு சொந்தமான பயன்பாட்டில் உள்ள JCB வாகனம் எண். TN-32-AQ-7652 மிகவும் பழுதடைந்த காரணத்தினால், மேற்படி வாகனத்தை பழுது நீக்கம் செய்திட வேண்டியுள்ளது. மேலும், நகராட்சி இடங்களில் சமன்படுத்துதல், கால்வாய் தூர்வாருதல், பள்ளங்களை மூடுதல், குப்பைகளை அகற்றுவது போன்ற பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, பணியின் அவசரம் கருதி M/s Dyna Tech., விழுப்புரம் நிறுவனத்தின் மூலம் வாகனம் பழுது நீக்கம் செய்தமைக்கு அதற்கான செலவினம் ரூ.1,86,737/-ஐ Sec-15-ன் கீழ் வருவாய் நிதியின் கீழ் வழங்கியதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

பதிவு செய்திடலாம். (8774/2021/இ1)

**12.** இந்நகராட்சிக்கு எதிரான சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் காலங்கடந்த வரியினங்களுக்காக ரூ.69,687/-ஐ சுமத்தப்பட்டதினால் ஓய்வூதிய பணப்பயன்கள் ஏதும் பெறமுடியவில்லை எனக்குறிப்பிட்டு திரு.R.வரதராஜன் (ஓய்வு), முன்னாள் வருவாய் உதவியாளர் அவர்களால் தொடரப்பட்ட வழக்கு எண் W.P.No.25947 of 2021 நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்தி தருமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க அரசு சிறப்பு வழக்கறிஞர் திரு.D.ரவிசந்தர் உயர்நீதிமன்றம் அவர்களிடம் ஒப்படைத்தமைக்கும், வழக்கு செலவினம் ரூ.15,000/-ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) வழக்கின் அவசர அவசியம் கருதி வழக்கினை திரு.D.ரவிசந்தர் வழக்கறிஞர் அவர்களிடம் ஒப்படைத்தமைக்கும், வழக்கறிஞர் கட்டணம் ரூ.15,000/- வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(10282/2021/சி1)

**13.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.31118/2021/அம்ருட்-2, நாள்.05.01.2022-ல் இந்நகராட்சிக்கு 15-வது நிதிக்குழு மானியத்தில் Untied Grant 2021-22-ம் ஆண்டுக்கென ரூ.162.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 15-வது நிதிக்குழு மானியம் வழிகாட்டு நெறிமுறைகளின்படி கீழ்காணும் பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ள விவரம் வருமாறு.

| Sl. No | Name of the work | Estimate Amount (Rs. In Lakhs) |
|---|---|---|
| 1 | Providing Buituminous surface road from VAO nagar to Collectorate master complex gate in Villupuram Municipality. | 23.00 |
| 2 | Providing Paver Block Pavement Drain with Small Culvert at GRP Street in Villupuram Municipality. | 22.00 |
| 3 | Construction of Bus stop at Asiriyar Nagar | 6.00 |
| 4 | Construction of Library Building at TPTC quarters | 13.00 |
| 5 | Providing landscaping and greenery arrangements to new office building | 22.00 |
| 6 | Supplying of Commercial Cold Storage freezer to Fish market | 10.00 |
| 7 | Providing WMM Batch work to Various Places in villupuram Municipality | 17.00 |
| 8 | Providing Road with Drain at Panampattu colony | 10.00 |
| 9 | Laying of approach road to new office building | 21.00 |
| 10 | Construction of Bridge in Anna nagar (Near side MCC) | 6.00 |
| 11 | Construction of Bridge at Anachampalayam main road | 6.00 |
| 12 | Construction of Bridge in Pandiyan nagar | 6.00 |
| | **Total** | **162.00** |

இந்நகராட்சிக்கு 15-வது நிதிக்குழு மான்யம் Untied Grant-ல் தேர்வு செய்யப்பட்டுள்ள மேற்காணும் 10 பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் வரிசை எண். 01, 02 ஆகிய இரண்டு பணிகள் அவசர அவசியம் கருதி வருவாய் நிதியின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. இப்பணிக்கு வருவாய் நிதியின் நிதி நிலைமையை கருத்தில் கொண்டு 15-வது நிதிக்குழு மான்யம் Untied Grant-ல் செலவினம் மேற்கொள்ளலாம். மீதமுள்ள வரிசை எண். 03 முதல் 12 வரையிலான 10 பணிகள் 15-வது நிதிக்குழு மான்யம் Untied Grant-ல் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் வரிசை எண். 03 முதல் 12 வரையிலான பணிகளை ஒப்பந்தப்புள்ளி கோரவும், 15-வது நிதிக்குழு மான்யம் Untied Grant-ல் செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. வரிசை எண். 01, 02 ஆகிய இரண்டு வருவாய் நிதியில் திட்டமிட்ட ஒப்பந்தப்புள்ளி கோரிய பணிகள் 15-வது நிதிக்குழு மான்யம் Untied Grant-ல் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(6474/2020/இ2)

**14.** இந்நகராட்சிக்கு சொந்தமான 1.புதிய பேருந்து நிலையத்தில் உள்ள தென்மேற்கில் கட்டண கழிவறை மற்றும் 2. எம்.ஜி.ரோட்டில் உள்ள மீன் நாளங்காடி கட்டண கழிவறை வசூலிக்கும் உரிமம் 2021-2022-ஆம் ஆண்டிற்கு ஏலம் போகாத நிலையில் துறை மூலம் வசூலிக்கப்பட வருகின்றது தற்போழுது வரை ஏலம் போகாதததால் 2022-23ம் ஆண்டிற்கு துறை மூலமே வசூலிக்கப்பட வேண்டிய நிலை உள்ளது. 2022-23ம் ஆண்டிற்கு மேற்காணும் ஆண்டு குத்தகை இனத்திற்கு 01.04.2022 முதல் தேவையான இரசீகள் புத்தகங்கள் அவசர அவசியம் கருதி அரசு சார்புடைய நிறுவனமான விழுப்புரம் மாவட்ட அச்சகம் மற்றும் எழுதுபொருள் கூட்டுறவு சங்கம் லிட்., விழுப்புரம். நிறுவனத்திடம் 2021-2022-ஆம் ஆண்டிற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட விலை விகிதத்தில் தேவைக்கேற்ப அச்சடித்து வழங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/-ஐ (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்

(10221/2019/அ1)

**15.** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் TN32-D2651 JCB வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்ய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான DYNATECH என்ற நிறுவனத்தின் உத்தேச விலைப்புள்ளி செலவினம் தொகை ரூ.40,000/- (ரூபாய் நாற்பராயிரம் மட்டும்) வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி பணி செய்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(948 /2022/எச்2)

**16.** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் TN32 AL 3961 டிப்பர் லாரிக்கு பழுது நீக்கம் செய்ய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான TVS என்ற நிறுவனத்தின் உத்தேச விலைப்புள்ளி செலவினம் தொகை ரூ.1,38,000/– (ரூபாய் ஒரு லட்சத்து முப்பத்தெட்டாயிரம் மட்டும்) வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டபடுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

மன்றம்அனுமதிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி பணி செய்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(1233/2022/எச்2)

**17.** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் குப்பை அள்ளும் டாடா ஏஸ் TN–32–AL–0617 வாகனத்திற்கு டயர் மற்றும் டியூப் பொருத்திட அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான SRI SARAVANA TYRES என்ற நிறுவனத்தின் உத்தேச விலைப்புள்ளி செலவினம் தொகை ரூ.14000/– (ரூபாய் பதினான்காயிரம் மட்டும்) வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டபடுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

மன்றம் அனுமதிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி பணி செய்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(85 /2022/எச்2)

**18.** துப்புரவு ஆய்வர்களின் 23.03.2022 நாளிட்ட குறிப்பில் விழுப்புரம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் முதிர் கொசுக்களை கட்டுப்படுத்துதல் பணிகள்–2022 இந்நகராட்சியின் 42 வார்டுகளில் உரிய புகைமருந்து அடிக்கும் பணிகளை மேற்கொள்ள நகர்மன்ற உறுப்பினர்கள் நகர்மன்ற தலைவர் ஆகியோரால் அறிவுறுத்தப்பட்டுவரும் நிலையில், இந்நகர மக்களின் பொது நலன் கருதியும், தொற்று இனங்களான டெங்கு மலேரியா போன்றவற்றைத் தடுக்கும் பொருட்டு புதியதாக புகைமருந்து இயந்திரங்கள் வாங்கப்பட வேண்டியுள்ளதாக தெரிவித்துள்ளார்கள். ஏனெனில் ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டு வரும் 9 இயந்திரங்களில் 1 மட்டுமே தற்போது பயன்படுத்தப்பட்டு வருவதுடன் 8 இயந்திரங்கள் லாயக்கற்றது என உரிய நுட்புனர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே 7 கோட்டங்களுக்கு தலா ஒன்றும் மற்றும் 5 இணைப்பு நகராட்சிப்பகுதிகளான சாலாமேடு, காகுப்பம் எருமணந்தாங்கள், வழுதரெட்டி ஆகிய பகுதிக்கு 3 எண்ணம் ஆக மொத்தம் 10 எண்ணிக்கையிலான கையால் அடிக்கப்படும் புகைமருந்து இயந்திரங்கள் மட்டும் (PORTABLE PULSE FOGGING MACHINE) இந்நகர மக்களின் நலன் கருதியும் மற்றும் 10 எண்ணிக்கையிலான சிலிண்டர் வாயு புகைமருந்து வீடுகளுக்கு அடிக்கப்படும் இயந்திரங்களும் அதில் பயன்படுத்தப்படும் சிலிண்டர்கள் 500 எண்ணிக்கையுடன் வாங்கி வழங்கிட கேட்டுக்கொண்டுள்ளனர்.

எனவே மேற்கண்ட புகைமருந்து அடிக்கும் இயந்திரங்கள் வாங்க உத்தேச செலவினம் ரூ.10 லட்சத்திற்கும், மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம். (5278/2020/எச்1)

**19.** நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையில் (ந.க.எண்.21787/ 2021/EA2 நாள்.2.10.2021) நகராட்சிகளில் கீழ்கண்ட அடிப்படை சேவை பணிகள் செய்தல் அவசியமாகிறது என்றும், இந்த சேவை பணிகளை திறம்பட செய்திட வேண்டிய பணியாட்கள் போதுமானதாக இல்லாத நிலையில் பணியாட்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப்பட்டு தினசரி சேவைகள் செயல்படுத்தப்படுகிறது.

1. திடக்கழிவு மேலாண்மை பணிகள்.
2. குடிநீர் வழங்கல் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரித்தல்
3. கழிவுநீர் அகற்றுதல் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரித்தல்
4. தெருவிளக்குகள் இயக்கி பராமரித்தல்.

இந்நிலையில் தற்போது வளர்ந்து வரும் தொழில் நுட்ப சூழலுக்கேற்ப புதிய வகையான வாகனங்கள், சிறிய வகை பேட்டரி வாகனம் (BOV) சிறுவகை வணிக வாகனம்(LCV), காம்பாக்டர் ஆகியவை திடக்கழிவு மேலாண்மை பணிக்கும், பக்கெட்டிங் வாகனம், ஜெட்ராடு வாகனம், சூப்பர் சக்கர் வாகனங்கள் , பாதாள கழிவு நீர் அகற்று பணிகளிலும் பயன்படுத்த வேண்டியுள்ளது என்பதை கருத்தில் கொண்டு பணியாட்களை அமர்த்தி பணி செய்வது அவசியமாகிறது. மேலும் மேற்கண்ட சேவை பிரிவு சார்ந்த கட்டமைப்புகளை இயக்குதல், பராமரித்தல் தொடர்பான பணிகளை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாட்களை அமர்த்தி செய்திடும் போது ஒவ்வொரு மாநகராட்சிகளும், நகராட்சிகளும் வெவ்வேறு அளவுகோலின்படி பணியாட்கள் அமர்த்துவதும் மற்றும் ஒரே மாதிரியான பணியாளர்களுக்கு ஒவ்வொரு மாநகராட்சி/நகராட்சிகளில் வெவ்வேறு விதமான ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருப்பது தெரிய வருகிறது. மேலும் இதுகுறித்து கலந்தாலேசனை செய்து ஒருமித்த கருத்து அடிப்படையில் பணியாளர்கள் அமர்த்துவதற்கு அளவுகோல்கள், அடிப்படை ஊதிய விகிதம் மற்றும் மனிதவள வெளிக்கொணர்வு அமர்த்தும் வழிமுறை தொடர்பான ஒப்பந்த ஆவணம் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுவதாகவும், வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியாட்களை பணியமர்த்தும் போது அவர்களுக்கு இந்த சுற்றறிக்கையின் வாயிலாக குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை ஊதியம் ESI, EPF, EDLI, GST மற்றும் வெளிக்கொணர்வு முகமையின் சேவைக்கட்டணம் (7 சதவீகிதத்திற்கு மிகாமல் ) ஆகியவற்றை கவனத்தில் கொண்டு மதிப்பீடு தயாரித்து அதனடிப்படையில் கருத்துரு பிரேரணை தயாரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் கருத்துரு தயாரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர நிர்வாக அனுமதி கோரி 18.11.2021 அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஏற்கெனவே திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொண்டு வரும் கிரீன் வாரியர் , திருவள்ளூர் என்ற நிறுவனத்திற்கு பிப்ரவரி 2022 வரை பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து அனுமதி பரிசீலனையில் உள்ளதாலும், திடக்கழிவு மேலாண்மை பணியில் தூய்மை பணியாளர்களின் பங்கு அவசியம் என்பதாலும் நிர்வாக அனுமதி பெற்று புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரும் வரையிலும் அல்லது மேலும் மூன்று மாதங்களுக்கு 01.03.2022 முதல் 31.05.2022 வரை ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.75.00 லட்சம் (ரூபாய் எழுபத்தைந்து லட்சம் மட்டும்) வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம். (5316/2018/எச்1)

**20.** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் குப்பை அள்ளும் காம்பாக்டர் லாரி TN 32-AC 8003 வாகனத்திற்கு டயர் பொருத்திட அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான விழுப்புரம் Sri Saravana Tyres என்ற நிறுவனத்திடமிருந்து டயர் பொருத்திட உத்தேச விலைப்புள்ளி செலவினம் ரூ.93000/- வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட வாகனத்திற்கு டயர் பொருத்திட அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்க வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார நலன் கருதி மேற்கண்ட வாகனத்தை பழுதி நீக்கம் செய்ய விலைப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம். (58/2021/எச்2)

**21.** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் இயங்கும் TN32 AC 8003 காம்பாக்டர் வாகனத்திற்கு புதியதாக 4 எண்ணிக்கை MRF டயர் மற்றும் டியூப்கள் விநியோகம் செய்ய கீழ்கண்ட 3 நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | Company Name | | |
|---|---|---|---|---|
| | | GOLDEN TYRES 20-D, Madras Road, Panruti-607 106 | PANKAJ TYRES, 99C PONDY ROAD, TINDIVANAM | SRI SARAVANA TYRES 38C, TRICHY TRUNK ROAD, VILLUPURAM |
| | | Amount Rs. | Amount Rs. | Amount Rs. |
| 1 | S3 c8 plus R16 Tyre Tube , Flap 2 Nos | 47300/- | 47400/- | 47200/- |
| 2 | 31F4 Plus R16 Tyre Tube , Flap 2 Nos | 43900/- | 44000/- | 43800/- |
| **Total** | | **91200/-** | **91400/-** | **91000/-** |

**அலுவலக குறிப்பு :–**

மேற்கண்ட அனைத்து இனங்களிலும் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள SRI SARAVANA TYRES, 38C, TRICHY TRUNK ROAD, VILLUPURAM என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம். மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பொது சுகாதார நலன் கருதி மன்றத்தின் முன் அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(53/2022/எச்2)

**22.** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் குப்பை அள்ளும் டாடா ஏஸ் வாகனம் TN 32 AL 0614 க்கு டயர் பழுதடைந்து விட்டதால் அதற்கு புதிய டயர் பொருத்திட அங்கீககரிக்கப்பட்ட நிறுவனமான SRI SARAVANA TYRES என்ற நிறுவனத்தின் உத்தேச விலைப்புள்ளி செலவினம் ரூ.14000/– வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி பணி செய்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(8839/2021/எச்2)

**23.** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் இயங்கும் TN32 AL 0614 டாடா ஏஸ் வாகனத்திற்கு புதியதாக 4 எண்ணிக்கை MRF டயர் மற்றும் டியூப்கள் விநியோகம் செய்ய கீழ்கண்ட நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | Company Name | | |
|---|---|---|---|---|
| | | GOLDEN TYRES 20–D, Madras Road Panruti–607106 | PANKAJ TYRES ,99C PONDY ROAD, TINDIVANAM | SRI SARAVANA TYRES 38C, TRICHY TRUNK ROAD, VILLUPURAM |
| | | Amount Rs. | Amount Rs. | Amount Rs. |
| 1 | 155D12Savari Lun W8 Tyre Tube , 2 Nos | 12700/– | 12900/– | 12500/– |
| Total | | 12700/– | 12900/– | 12500/– |

**அலுவலக குறிப்பு : –**

மேற்கண்ட அனைத்து இனங்களிலும் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள SRI SARAVANA TYRES, 38C, TRICHY TRUNK ROAD, VILLUPURAM என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம். மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பொது சுகாதார நலன் கருதி மன்றத்தின் முன் அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(8839/2021/எச்2)

**24.** விழுப்புரம் நகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளில் சொத்து வரி விதிப்பு உள்ள கட்டிடங்களுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்படுகிறது. தற்போது சொத்து வரி செலுத்தக் கோரி கேட்பு அறிவிப்புகள் அனுப்பப்பட்டதில், அதில் குடிநீர் கட்டணமும் செலுத்த கோரி குறிப்பிட்டு அனுப்பப்பட்டது. பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் குடிநீர் கட்டணம் செலுத்த வரும் போது ஒரே வீட்டிற்கு இரண்டு குடிநீர் இணைப்பு எண்ணாகவும் மற்றும் வைப்பு தொகை, சாலை சீரமைப்பு கட்டணம், Flow control வால்வு ஆகிய கட்டணங்கள் இருமடங்குகளாக கணினியில் எழுப்பப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களிடமிருந்து வரும் புகார்களின் அடிப்படையில் வரி விதிப்புதாரர்களுக்கு இரண்டு கேட்புகள் மற்றும் இரண்டு குழாய் இணைப்பு எண்களாக பதிவாகியுள்ளது.

இதனை தொடர்ந்து 90 குடிநீர் குழாய் இணைப்பு எண்களுக்கு 2019–20 முதல் 2021–22 வரை தவறாக எழுப்பிய கேட்பு தொகை ரூ.1,21,450/–ஐ வசூலிக்க இயலாது என்பதை உறுதி செய்யப்படுகிறது. அறிவிப்புகள் அனுப்பி இணைப்பு துண்டிப்பு மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே, தமிழ்நாடு மாவட்டம் நகராட்சிகளின் சட்டம் 1920, பிரிவு 118–ன்விதி வசூலிக்க இயலாத குடிநீர் கட்டணம் கேட்பு தொகை ரூ.1,21,450/–ஐ தள்ளுபடி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

தமிழ்நாடு மாவட்டம் நகராட்சிகளின் சட்டம் 1920, பிரிவு 118–ன்விதி வசூலிக்க இயலாத குடிநீர் கட்டணம் கேட்பு தொகை ரூ.1,21,450/–ஐ தள்ளுபடி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(1207/2022/இ2)

**25.** மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2021–22–ம் ஆண்டு சட்டமன்ற கூட்ட தொடரில் நகராட்சி நிர்வாகத்துறை மானிய கோரிக்கையின் போது நகராட்சிக்கு சொந்தமான குளங்கள் தூர்வாரி மேம்படுத்தப்படும் என அறிவித்ததை தொடர்ந்து, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு கன்னியாகுளம் ரோடில் அமைந்துள்ள கன்னியாகுளத்தினை சுற்றி நடைபாதை, Fencing, நீர்வரத்து மற்றும் நீர் வெளியேறும் வாய்க்கால்களை சீரமைத்தல் மற்றும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைத்தல் போன்ற பணிகளுக்கு ரூ.57.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. விவரம் வருமாறு.

| Sl. No | Name of the work | Estimate Amount (Rs.in lakhs) |
|---|---|---|
| 1 | Providing Walking pathway, Cleaning of inlet and outlet channels and RWH structures arrangements in Kanniya Kulam | 57.00 |

எனவே, மேற்படி திட்டத்தினை செயல்படுத்திட கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மானியமாக நிதி ஒதுக்கீடு செய்து தந்திடவும், நிர்வாக அனுமதி வழங்கிட கோரியும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்கள் வழியாக மதிப்பீடுகள் மற்றும் திட்ட அறிக்கை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்கள் வழியாக மதிப்பீடுகள் மற்றும் திட்ட அறிக்கை சமர்ப்பிக்கலாம்.

(6121/2021/இ1)

**26.** விழுப்புரம் நகராட்சி நகர்மன்ற உறுப்பினர்கள் அவர்களின் வார்டுகளில் கீழ்கண்ட பணிகள் செய்து தருமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

| வ. எண் | நகர்மன்ற உறுப்பினர் பெயர் மற்றும் வார்டு எண் திருவாளர்கள் | பணி விவரம் |
|---|---|---|
| 1 | வெ.கன்னிகா<br>வார்டு எண்-7 | பெரியார் நகர் நான்கு குறுக்குத் தெருக்களில் சாலை வசதி மற்றும் பாதாள சாக்கடை வசதி செய்தல். |
| | | ரஜாக் லே-அவுட் மெயின்ரோடு, பாண்டியன் நெடுஞ்செழியன் மற்றும் பாரதிதாசன் தெருவில் மழை நீர் வடிகால் அமைத்து தருதல். |
| 2 | கு.ராதிகா<br>வார்டு எண் -9 | வடக்கு தெரு, ஜால்னா தெரு, மேல் தெரு உயர் கோபுர மின்விளக்கு அமைத்து தருதல். |
| | | வடக்கு தெரு சந்து, மாசிலாமணி பேட்டை குறுக்கு தெருக்களில் சிமெண்ட சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதி செய்து தருதல். |
| 3 | மு.பிரேமா<br>வார்டு எண் -10 | புதுத்தெரு சாலை சேதமடைந்ததால் புதியதாக சிமெண்ட் சாலை அமைத்துத் தருதல் |
| 4 | அ.வசந்தா<br>வார்டு எண் -19 | பி.என் தோப்பு நகராட்சி தொடக்கப்பள்ளியில் 4 வகுப்பறை கட்டிடம், 4 கழிப்பறை கட்டிடம், மின்விசிறி , குடிநீர் வசதி செய்து தருதல். |
| | | சத்துணவு மையம் கட்டிட பராமரிப்பு மற்றும் மின் இணைப்பு வசதி செய்து தருதல். |
| | | பொதுக்கழிவறையில் சீரமைப்பு பணி, கிருஷ்ணப்பன் தெருவில் சாலை வசதி, |
| | | கிழக்கு பாண்டி ரோடு LIC க்கு அருகில் புதியதாக அங்கன்வாடி மையம் கட்டிட வசதி. |
| 5 | வ.பழனிவேலு<br>வார்டு எண் -28 | ராஜீவ்காந்தி நகரில் ஈமச்சடங்கு மண்டபம் சீரமைத்தல். |
| | | ராஜீவ்காந்தி நகரில் மின் இணைப்பு மற்றும் தண்ணீர் தொட்டி வசதி செய்து தருதல். |

| | | |
|---|---|---|
| 6 | பெ.வித்தியசங்கரி<br>வார்டு எண் –32 | வழுதரெட்டி அரசு ஆதிதிராவிடர் மேல்நிலைப்பள்ளியில் குடிநீர் வசதி செய்து தருதல் |
| 7 | க.காவியா<br>வார்டு எண் –33 | 33வது வார்டில் தெருக்கள் பழுதடைந்துள்ளதை சீரமைத்தல், அங்கன்வாடி மையம் அமைத்தல், சமுதாயக்கூடம் அமைத்தல், பொதுகழிவறை மற்றும் கருமகாரிய கொட்டகை அமைத்து தருதல். |
| 8 | ரா.கல்யாணசுந்தரம்<br>வார்டு எண் –34 | போலீஸ் ஜகன்நாதன் நகரில் அமைத்துள்ள பூங்காவை சீரமைத்து பயன்பாட்டிற்கு கொண்டு வருதல். |
| 9 | R.மணவாளன் வார்டு எண் –36 | ஆசாகுளம் முதல் தெரு, சீனுவாச நகர் மற்றும் காமராஜர் தெருவில் கல்வெட்டுகள், சீனுவாச நகர் முதல் தெருவில் சாலை சீரமைப்பு பணி, கே.கே.நகர் திரும்பும் முனையில் வாய்க்கால் மேல்பகுதி கிரில் அமைக்கும் பணி, ராமகிருஷ்ணா நகரில் கல்வெட்டு அமைத்தல் மற்றும் கால்வாய் சீரமைத்தல் பணிகள். |
| 10 | ம.இளந்திரையன்<br>வார்டு எண் –37 | ராகவன்பேட்டை மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி இடிந்து விழும் நிலையில் உள்ளதால், சீரமைக்கும் பணி. |
| 11 | வெ.புருஷேத்தமன்<br>வார்டு எண் –39 | ஜெ.ஜெ.நகரில் தெருவிளக்கு வசதி மற்றும் பொதுக்கழிப்பிடம். |
| | | சிங்கப்பூர் நகரில் திருச்சி ரோடு தெய்வானை அம்மாள் கல்லூரி அருகில் தொடங்கி கே.கே.ரோடு இணைப்பு சாலை வரை பழுதடைந்துள்ள சாலையை அகலப்படுத்தி புதுப்பித்து தார் சாலை அமைக்கும் பணி. |
| 12 | A.S.சாந்தராஜ்<br>வார்டு எண் –41 | 41வது வார்டில் அனைத்து தெருக்களிலும் தார் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்து தருதல். |
| | | நூலக கட்டிடம் அமைத்தல், பூங்கா சீரமைத்தல், கரும காரிய கொட்டகை அமைத்தல், மயான பாதை சீரமைத்தல், ரேஷன் கடை புதுப்பித்தல். |

<u>அலுவலக குறிப்பு :–</u>

மேற்கண்டவாறு நகர்மன்ற உறுப்பினர்கள் அளித்த கோரிக்கை மனுக்களை கள ஆய்வு செய்து திட்ட மதிப்பீடு தயார் செய்து பணிகள் மேற்கொள்ள பொறியர் அவர்கள் மூலம் நடவடிக்கை மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தலைவர்,**
**விழுப்புரம் நகராட்சி**